**நிறைவேற்று மனு எண் : 05/2025 in அசல் வழக்கு எண்.156/2015**

**நாள்: 12.08.2026**

**எ.ம.சா. 1 – ராஜேந்திரன் த/பெ. மாசிலாமணி**

**இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர். இரு தரப்பினரும் ஆஜர்**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர் தரப்பில் எ.ம.சா.1ன் குறுக்கு விசாரணை :**

1) எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் கூறியதன் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் பத்தி 1ல் " 1 முதல் 7 வரையிலான பாராக்களில் கண்டுள்ள சங்கதிகள் மட்டும் உண்மையானது ஆகும்." என குறிப்பிட்டுள்ளேன் அவை என்ன சங்கதிகள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எனக்காக மட்டும் அளிக்கிறேனா அல்லது எனது தந்தைக்கும் சேர்த்து அளிக்கிறேனா என்றால் இருவருக்கும் சேர்த்து தான் அளிக்கிறேன். மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நாங்கள் பிரச்சனை செய்ததாக தான் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் அந்த மாதிரி எதுவும் செய்யவில்லை.

3) மனுதாரர் எனக்கு உறவினாரா என்றால் இல்லை. எனக்கும் அவருக்கும் இடையே முன்விரோதம் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி வழக்கு சொத்தை என் தந்தை தான் முன் நின்று மனுதாரருக்கு வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அதில் எனது தந்தை சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

4) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் நாங்கள் பிரச்சனை செய்ததால் தான் அவர் எங்கள் மீது வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால்

நாங்கள் எதுவும் பிரச்சனை செய்யவில்லை. மனுதாரர் 2015ம் வருடத்திலேயே என் மீதும், என் தந்தையின் மீது அசல் வழக்கு எண்.156/2015 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், மேற்படி அசல் வழக்கில் நாங்கள் வழக்கறிஞர் நியமித்து பதிலுரை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான்.

5) அதன்பின்னிட்டு மேற்படி அசல் வழக்கானது வழக்கு தாக்கல் செய்து 8 ஆண்டுகள் கழித்து விசாரணைக்கு வந்தபோது நான் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல, எனது தந்தைக்கு அறுவை சிகிச்சை நடைபெற்ற காரணத்தினால் 2 வாய்தாக்களுக்கு மட்டும் வரவில்லை. நான் நீதிமன்றத்திற்கு வருகை தராத காரணத்தினால் மேற்படி வழக்கில் 06.11.2023 அன்று எங்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்றால் சரிதான்.

6) மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்நிறைவேற்று மனுவானது எப்போது தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 2023ல் ஏற்பட்ட தீர்ப்பு குறித்த விவரமானது எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் தேதி தெரியாது. ஆனால் தீர்ப்பான விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

7) மேற்படி தீர்ப்பாணையானது ரத்து செய்யப்பட்டதாக நான் என் முதன்மை விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன், தீர்ப்பாணையை ரத்து செய்ய நான் எந்த தேதியில் மனுதாக்கல் செய்தேன் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 2025ம் ஆண்டில் தாக்கல் செய்தேன், தேதி தெரியாது என்றால் சரிதான். எந்த தேதியில் ஒருதலைபட்ச தீர்ப்பாணையானது ரத்து செய்யப்பட்ட என்ற விவரத்தை என்னால் கூற இயலுமா என்றால் 2023ம் ஆண்டில் ரத்து செய்யப்பட்டது.

8) தீர்ப்பாணையை ரத்து செய்வதற்கு தாக்கல் செய்த மனுவுடன் தாக்கல் செய்த பிரமாண பத்திரிக்கையில் எனக்காகவும், எனது தந்தைக்காகவும்,

தனிதனியாக தாக்கல் செய்தோமா அல்லது ஒன்றாக தாக்கல் செய்தோமா என்றால் ஒன்றாக தான் தாக்கல் செய்தோம். மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அனுபவிப்பது சம்பந்தமாக எனக்கும், மனுதாரருக்கும் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

9) காவல்துறையினர் மேற்படி வழக்கு சொத்தை நேரில் பார்த்தார்கள் என்றால் சாட்சியானவர் முதலில் பார்த்தாக குறிப்பிட்டுவிட்டு உடனடியாக அதுகுறித்து தெரியாது என கூறுகிறார். மனுதாரர் அவரின் சொத்தில் தக்காளி போன்ற பணப்பயிர்களை தான் பயிரிடுவார் என்றால் சரிதான்.

10) மேற்படி தக்காளி போன்றவற்றை விவசாய பொருட்களை அவர்கள் பெங்களூருக்கு வாகனத்தின் மூலம் எடுத்து சென்ற போது நாங்கள் அப்பாதையை தடை செய்தோம் என்றால் அவர் எங்களுக்கு வழிபாத்தியம் இல்லை என மறுத்த காரணத்தினால் ஊர்பொதுமக்களுடன் தடை செய்தோம். அதனால் தான் மனுதாரர் காவல்நிலையத்தில் புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி சம்பவமானது 04.03.2025 அன்று தான் நடைபெற்றது என்றால் சரிதான்.

11) அதற்குபின்னிட்டு தான் மனுதாரர் நீதிமன்ற அவமதிப்பு மனுவை தாக்கல் செய்தார் என்றாலும், அதனையடுத்து தான் நீதிமன்றத்தில் இருந்து அதுகுறித்த அறிவிப்பு எனக்கு அளிக்கப்பட்டது என்றாலும் சரிதான். அவ்வாறு இம்மனுவின் அறிவிப்பானது நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற பின்னர் தான் நான் கடந்த 06.11.2023 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

12) 06.11.2023 அன்று மனுதாரர் அவருக்கு சாதகமாக வழக்கில் தீர்ப்பாணை பெற்ற பின்னர் தான் மேற்குறிப்பிட்ட பாதையை தடை

செய்த சம்பவமானது நடைபெற்றது என்றால் சரிதான். மனுதாரர் தற்போது உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். மனுதாரரின் கணவர் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் JE ஆக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான்.

13) நான், எனது தந்தை மற்றும் எங்களுடன் இருந்த ரவுடியாட்கள் அனைவரும் சேர்ந்து மனுதாரர் வழக்கு சொத்தானது தனக்கு மட்டும் பாத்தியம் என அசல் வழக்கில் தீர்ப்பாணை பெற்ற பின்னர் நாங்கள் அச்சொத்தில் அக்கிரமபிரவேசம் செய்து அழிம்புகள் செய்து, பாதையை மறித்து அவருக்கு இடையூறு ஏற்படுத்தினோம் என்றால் அக்கிரமபிரவேசமும், அழிம்பும் செய்யவில்லை. அவர்கள் எங்களது பாதை உரிமையை மறுத்ததால் நாங்கள் வாகனம் செல்வதை தடை செய்தோம்.

14) நாங்கள் வாகனத்தை தடை செய்த காரணத்தினால் தான் மனுதாரரால் தனது சொத்தில் விளைந்த தக்காளி, கத்திரிக்காய் போன்ற பணப்பயிர்கள் சேதமடைந்தன என்றால் சரியல்ல, ஒரே ஒரு முறை தான் அவர்கள் வழிப்பாதையை மறித்த காரணத்தினால் ஊர்பொதுமக்களுடன் இணைந்து நாங்கள் பாதையை மறித்தோம், பின்னர் சமரசம் பேசப்பட்டது.

15) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு வழிஉரிமை உள்ளது என நான் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் காலம் காலமாக செல்லும் பாதை தான். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், என்ன ஆவணம் என்றால் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை.

16) மனுதாரருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் தான் அசல் வழக்கை நடத்தாது ஒருதலைபட்ச தீர்ப்பாணைக்கு விட்டோம் என்றாலும், மனுதாருக்கு மீண்டும் இடையூறு செய்ததால் தான் மனுதாரர் எங்கள் மீது நீதிமன்ற அவமதிப்பு குறித்த

மனுதாக்கல் செய்த பின்னர் தான் நாங்கள் ஒருதலைபட்ச தீர்ப்பாணையை ரத்து செய்ய மனுதாக்கல் செய்தோம் என்றாலும் சரியல்ல, நாங்கள் இடையூறு செய்யவில்லை. நானும், எனது தந்தையும் மனுதாரரின் சொத்தில் மனுதாரருக்கு இடையூறு ஏற்படுத்தியதாலும், ஏற்படுத்தி வருவதாலும், நீதிமன்ற உத்தரவை அவமதித்த குற்றத்திற்காக நாங்கள் இருவரும் கைது செய்யப்பட்டு சிவில் சிறையில் அடைக்கப்படவேண்டியவர்கள் என்ற சொன்னால் சரியல்ல.

**சாட்சியானவர் மறுவிசாரணை செய்யப்படவில்லை.**

SARANYA M

Digitally signed by SARANYA M
Date: 2026.08.12 14:33:51 +0530